பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 70** **நாள்: 23.05.2018**

**முதல் அரையாண்டு 2018–2019க்கான திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரியை செலுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

மத்திய அரசு / மாநில அரசு துறைகளில் சம்பளம் பட்டுவாடா அலுவலர் / அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் துறைகள் / நிறுவனங்கள் / வங்கிகள் / தனியார் நிறுவனங்கள் / அரசு சார்ந்த நிறுவனங்கள் / பிற நிறுவனங்கள் / விளம்பர நிறுவனங்கள் / அனைத்து வகையான நிறுவனங்கள் / கம்பெனிகள் / தொழில்புரிவோர்கள் / தமிழ்நாடு அரசுக்கு விற்பனை வரி செலுத்தும் நபர்கள் / சொந்த தொழில்புரிவோர்கள் / பிற வியாபாரம் புரிவோர்கள் / எண்டர்பிரைசஸ் ஆகியோர்கள் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, பிரிவு 138–பி (2) மற்றும் (13)ன் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட மன்றத் தீர்மான எண்.382/2018, நாள்:11.05.2018ன்படி 01.04.2018 (முதல் அரையாண்டு 2018–2019) முதல் திருத்தியமைக்கப்பட்ட கீழ்காணும் அட்டவணையின்படி தொழில்வரி செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>அட்டவணை</u>**

| வ.எண். | அரையாண்டுக்கான சராசரி வருமானம் | | 01.10.2008 முதல் வசூலிக்கப்பட்டு வந்த அரையாண்டுக்கான தொழில்வரி ரூ. | 01.04.2018 முதல் திருத்தியமைக்கப்பட்ட அரையாண்டுக்கான தொழில்வரி ரூ. |
|---|---|---|---|---|
| | முதல் ரூ. | வரை ரூ. | | |
| 1 | 21,000 வரை | –– | –– | –– |
| 2 | 21,001 | 30,000 | 100/– | 135/– |
| 3 | 30,001 | 45,000 | 235/– | 315/– |
| 4 | 45,001 | 60,000 | 510/– | 690/– |
| 5 | 60,001 | 75,000 | 760/– | 1025/– |
| 6 | 75,001/– மற்றும் அதற்கு மேல் | – | 1095/– | 1250/– |

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**